FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364121

1. District : சிவகங்கை PS: அரசு ஊழல் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு Year: 2026 FIR No. 02/26 Date: 11/5/2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முதஅ. எண் நாள்

2. (i) Act சட்டம் : Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from 07/5/26 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 08/5/26 நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11/05/2026 நேரம் 08.40 hrs

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III நேரம் 09.15 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: நெடுங்கரணை தூண சமுதாயகம் சிவகங்கை
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : சுமார் 01.00 மீ. தென் திசை
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. திருத்தகாமி (b) Father's/ Husband's Name : திருஞ்சம்பந்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 56/26 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : க. எண் 3/277 பெரிய கோவிலூர்
தொழில் முகவரி பரமத்தி கிராம மாவட்டம் (மு), காளையார்கோவில் (வ)
சிவகங்கை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. முத்துப்பாண்டி ADE, நெடுங்கரணை தூண சமுதாயகம் சிவகங்கை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 11.05.2026 தேதி 08.40 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், பருத்திக்கண்மாய் அஞ்சல், பெரியகிளுவச்சி, க.எண். 3/277 என்ற முகவரியில் வசிக்கும் இருளப்பன் என்பவரின் மகன் திரு.கந்தசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை, நெடுஞ்சாலைத்துறை ADE திரு.செய்யது இப்ராஹிம் ஆகியோரைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

இ. கந்தசாமி 11-5-26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

ஆ. செல்வி 11/05/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

R. ஜேசுதாஸ்
சார்பு ஆய்வாளர்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

11/05/2026 at 10.15 hrs

Name: பெயர் .....
Rank: நிலை ..... No. எண் .....

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண். 02/2026 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

11.05.2026-ம் தேதி 09.15 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 02/2026 u/s.7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர், இ.கந்தசாமி, த.பெ.இருளப்பன், க.எண்-3/277, பெரியகிளுவச்சி, பருத்திகண்மாய் அஞ்சல், காளையார்கோவில் வட்டம், சிவகங்கை மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை மாவட்டம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். EKS Constructions என்னும் பெயரில் ஒப்பந்ததாரராக இருந்து வருகிறேன். 1. சாத்தரசன்கோட்டை சாலை முதல் சூராணம் சாலை வரை, 2. மதுரை-தொண்டி சாலை முதல் அல்லூர்-பனங்காடி சாலை வழியாக சமத்துவபுரம் சாலை வரை, 3. ஒக்கூர்-நாட்டரசன்கோட்டை சாலை முதல் நடராஜபுரம் சாலை வரை தார்சாலைகள் Strengthening மற்றும Widening செய்ய சிவகங்கை நெடுஞ்சாலைத்துறை மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதனடிப்படையில் மூன்று சாலைகளிலும் பணிகள் மேற்கொள்ள எனது EKS Constructions மூலம் மொத்த மதிப்பீடு தொகையில் 0.020 சதவீதம் குறைவாக காண்பித்து விலைப்புள்ளியை கோரியிருந்தேன். எனது விலைப்புள்ளி பட்டியலை ஏற்றுக்கொண்டு, 1. சாத்தரசன்கோட்டை சாலை முதல் சூராணம் சாலை வரை 24/0-25/0 Km., (1000மீட்டர்) 2. மதுரை-தொண்டி சாலை முதல் அல்லூர்-பனங்காடி சாலை வழியாக சமத்துவபுரம் சாலை வரை-0/0-0/700, மீட்டர், 3. ஒக்கூர்-நாட்டரசன்கோட்டை சாலை முதல் நடராஜபுரம் சாலை வரை 0/0.1/200 மீட்டர் (1200 மீட்டர்) ஆகிய பகுதிகளில் பணி செய்ய GST-யுடன் சேர்த்து ரூ.2,15,61,362/- (ரூபாய் இரண்டு கோடியே பதினைந்து இலட்சத்து அறுபத்தோராயிரத்து முந்நூற்று அறுபத்து இரண்டு) ரூபாய்க்கு சிவகங்கை நெடுஞ்சாலைத்துறை க.எண் TRP No. 046 Vol-II/2025-26/இவ.அ-1, நாள்:26.11.2025-ன்படி எனது நிறுவனத்திற்கு ஒப்பந்த ஏற்பு ஆணை வழங்கப்பட்டது. பின்பு நான் ரூ.4,34,000/-ஐ வைப்புத் தொகையாக கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை, சிவகங்கை அவர்களது பெயரில் சிவகங்கை IDBI வங்கியில் வைப்புத்தொகை பத்திரம் பெற்று கொடுத்த பின்பு வேலை ஆரம்பித்து நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டது. அதற்கான செலவுத்தொகையை 28.01.2026ம் தேதி 71,01,270/- + 47,41,847/- ரூபாயும், 27.02.2026ம் தேதி 77,08,639/- ஆக மொத்தம் 1,95,51,756/- ரூபாய் எனது நிறுவன

வங்கி கணக்கில் நெடுஞ்சாலைத்துறை சிவகங்கை மூலம் செலுத்தப்பட்டது. மீதி தொகையான ரூ.16,08,269/- மற்றும் போனஸ் 1% ரூ.2,39,000/- சேர்த்து சுமார் 18,47,269/-ரூபாய் எனக்கு வரவேண்டியுள்ளது. இந்நிலையில் கடந்த 06.05.2026ம் தேதி மாலை சுமார் 05.12 மணியளவில் 94434 30140 என்ற Watsapp எண்ணிலிருந்து எனது 98427 81451 என்ற Watsapp எண்ணிற்கு அழைப்பு வந்தது, அதை நான் அட்டன்பன்னி பேசியபோது "நான் நெடுஞ்சாலைத்துறை ADE செய்யது இப்ராஹிம் பேசுகிறேன் உங்களது Final Bill சம்மந்தமாக பேசனும், என்னை வந்து பாருங்கள் என்றார். அதற்கு நான் வெளியில் இருக்கிறேன் வந்ததும் உங்களை சந்திக்கிறேன்" என்று சொல்லிவிட்டு போனை வைத்து விட்டேன். பின்பு 07.05.2026ம் தேதி மாலை சுமார் 04.01 மணியளவில் 94434 30140 என்ற Watsapp எண்ணிலிருந்து, எனது 98427 81451 என்ற Watsapp எண்ணிற்கு மீண்டும் அழைப்பு வந்தது, அதை நான் அட்டன்பன்னி பேசியபோது "நான் நெடுஞ்சாலைத்துறை ADE செய்யது இப்ராஹிம் தான் பேசுகிறேன் உங்களுக்கு வரவேண்டிய Final Bill சம்மந்தமாக என்னை வந்து பார்க்கச் சொன்னேன், இன்னும் நீங்கள் வரவில்லையே என்றார். அதற்கு நான், என்ன விஷயம் சார் என்று கேட்டதற்கு, உங்களது Final Bill release செய்யவேண்டும் என்றால் 1,20,000/- ரூபாய் எனக்கு தரவேண்டும் என்று கேட்டு, உடனே என்னை வந்து பாருங்கள் என்று சொன்னார். அதற்கு நான் வெளியில் இருக்கிறேன், நேரில் வந்து பேசிக்கொள்கிறேன் என்று போனை வைத்துவிட்டேன்." பின்பு 08.05.2026ம் தேதி காலை சுமார் 10.51 மணியளவில் சிவகங்கை ADE நம்பரில் இருந்து எனக்கு Missed Call வந்தது அதன்பிறகு, பகல் சுமார் 12.45 மணியளவில் நெடுஞ்சாலைத்துறை ADE திரு.செய்யது இப்ராஹிம் அவர்களை, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அமைந்திருக்கும் நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்தில் வைத்து சந்தித்தேன், அப்போது ADE அவர்களிடம் எனது Final Bill சம்மந்தமாக வந்து பார்க்கச் சொன்னீர்கள் சார், அதான் வந்தேன் என்று சொன்னதற்கு, உங்களுக்கு வரவேண்டிய தொகை மற்றும் 1 சதவிகித போனஸ் சேர்த்து, Bill தயார் செய்து SE-க்கு அனுப்பிவிட்டேன். அந்த பணம் உங்களுக்கு கிடைக்க வேண்டுமானால் எனக்கு 1,20,000/- ரூபாய் தருமாறு கேட்டார். அதற்கு நான் வேலையை சரியாக செய்து முடித்துவிட்டேனே, அப்புறம் எதற்கு சார் உங்களுக்கு பணம் என கேட்டதற்கு, உங்களுக்கு முழு தொகையும் கிடைக்க வேண்டும் என்றால், நான் கேட்ட 1,20,000/- ரூபாய் பணத்தை கொண்டு வந்து தாருங்கள் என்றார். உடனே நான், சார் நான் ரொம்ப கஷ்டப்படுறேன் கொஞ்சம்

குறைச்சுக்கங்க என்று சொன்னதற்கு, சரி 20,000/- ரூபாய் குறைத்துக் கொண்டு 1,00,000/- ரூபாய் கொண்டு வந்து என்னிடம் தாருங்கள், நான SE-யிடம் பேசி உங்களுக்கு சேர வேண்டிய மீதி தொகையை ரெடிபண்ணி தருகிறேன் என்று சொல்லி, பணம் ரூ.1,00,000/- த்தை கொடுத்தால் மட்டுமே உங்களுக்கு SE-யிடம் பேசி பணம் கிடைக்க ஏற்பாடு செய்வேன், இல்லை என்றால் File-யை SE-யிடம் சொல்லி return-போட செய்துவிடுவேன் என்று கறாராக கூறினார், சரி சார் நான் பணத்தை ரெடிபண்ணிட்டு உங்களை வந்து சந்திக்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. எனக்கு சேர வேண்டிய தொகையை பெற்றுத்தர என்னிடம் 1,00,000/- ரூபாய் லஞ்சம் கேட்கும் சிவகங்கை நெடுஞ்சாலைத்துறை ADE திரு.செய்யது இப்ராஹிம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, sd/-xxxxx, **இணைப்பு:** 1. சிவகங்கை நெடுஞ்சாலைத்துறை க.எண் TRP No. 046 Vol-II/2025-26/இவ.அ-1, நாள்:26.11.2025-ன் நகல். 2. சிவகங்கை நெடுஞ்சாலைத்துறை ADE செய்யது இப்ராஹிம் Watsapp Call-ல் பேசியதற்கான Screen Short நகல்.

Sir, Received the complaint on 11.05.2026 at 08.40 hrs, genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai, and registered a case in Sivagangai V&AC Crime.No.02/2026 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on 11.05.2026 at 09.15 hrs and took up for investigation. sd.R.Jesudoss, Inspector of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் FIR, அசல் புகார் மனு மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகியவற்றை கணம் முதன்மை மாவட்ட நீதிபதி, முதன்மை மாவட்ட நீதிமன்றம் சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

11/05/2026

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Sivagangai.